MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-113)

30-06-2019 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விகாரி வருடம் ஆனி 15 | வருட சந்தா ₹150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 56 | இதழ் 25 பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர்: அருட்திரு C. அந்தோனி ரோச்

## இயேசுவின் முழு இருப்பின் தொகுப்பே திருநற்கருணை

- திருத்தந்தை



**த**ந்தையாம் இறைவனுக்கும் தன் சகோதரர், சகோதரிகளுக்கும் அன்புகாட்டும் இயேசுவின் முழு இருப்பின் தொகுப்பே திருநற்கருணை என, இஞ்ஞாயிறன்று வழங்கிய மூவேளை செப உரையில் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தனக்குத்தானே வாழ்தல் என்ற போக்கிலிருந்து மாறி, இறைவன் நமக்குக் கொடுத்துள்ள சிறியவற்றைக்கூட மற்றவர்களுடன் பகிர முன்வரும் மாற்றத்தையே, இயேசுவின், 'அப்பம் பலுகுதல்' புதுமை எடுத்துரைக்கிறது என, இஞ்ஞாயிறு நற்செய்தி வாசகத்தை மையப்படுத்தி, மூவேளை செப உரை வழங்கினார்.

இயேசுவின் மெசியாவுக்குரிய அதிகாரத்தை வெளிப்படுத்தும் இப்புதுமை, மக்கள் மீது அவர் கொண்டிருந்த கருணையையும் வெளிப்படுத்துவதாக உள்ளது என்று கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் பாடுகளுக்கு முந்தைய நாள், தன் இறப்பு மற்றும் உயிர்ப்பின் நிலையான நினைவுச் சின்னமாக, புதிய நீடித்த உடன்படிக்கையாக திருநற்கருணையை இயேசு விட்டுச் சென்றார் என மேலும் கூறினார். இயேசுவைத் தன்னுள் கொண்டிருக்கும் திருநற்கருணை எனும் உன்னத கொடை மீது நம் மகிழ்ச்சியை, ஒவ்வோர் ஆண்டும், இந்த திருஉடல் திரு இரத்த திருவிழாவின்போது புதுப்பிப்போம் என, மேலும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## இளையோரே, திருஅவைக்கு நீங்கள் தேவைப்படுகின்றீர்கள்

**இ**ளையோர் மாமன்றத் தந்தையர் மிகவும் விரும்பியது போன்று, மேய்ப்புப்பணியில் மனமாற்றம் கொண்டுவருவதில் இளையோர் முதன்மைக் கருவிகளாக உள்ளனர் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சனிக்கிழமையன்று ஓர் இளையோர் குழுவிடம் கூறினார். பொதுநிலையினர், குடும்பம், மற்றும் வாழ்வு திருப்பீட அவை ஏற்பாடு செய்த 11வது உலகளாவிய இளையோர் கூட்டத்தில், 100 க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து கலந்துகொண்ட ஏறத்தாழ 350 பிரதிநிதிகளை, ஜூன் 22, இச்சனிக்கிழமையன்று, வத்திக்கானில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எம்மாவுஸ் சீடர்களின் அனுபவத்தை மையப்படுத்தி உரையாற்றினார்.

இயேசுவின் திருஉடல், திருஇரத்தப் பெருவிழா சமயத்தில் இந்தக் கூட்டம் நடைபெறுவது இறைபராமரிப்பு என்றே சொல்ல வேண்டும் எனவும், கிறிஸ்துவின் பிரசன்னத்தில் எம்மாவுஸ் சீடர்களின் வாழ்வு சுடர்விட்டது போன்று, இளையோரும் இன்று, இருளான இரவில் ஒளியாகத் திகழ அழைக்கப்பட்டுள்ளனர் எனவும் திருத்தந்தை கூறினார். நாம் மற்றவரை எந்த அளவுக்கு ஆண்டவரிடம் கொண்டு வருகிறோமோ, அந்த அளவுக்கு, நம் வாழ்வில் அவரின் பிரசன்னத்தை உணர்வோம் என்றும், கடவுளின் இன்றையப் பொழுது நீங்களே என்றும், திருஅவைக்கு நீங்கள் தேவைப்படுகின்றீர்கள் என்றும், இளையோரிடம் திருத்தந்தை கூறினார்.

**2022 ல் லிஸ்பனில் உலக இளையோர் நாள்:** "மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார்" (லூக்.1:39) என்ற தலைப்பில், 2022 ம் ஆண்டில் போர்த்துக்கல் நாட்டு லிஸ்பனில், உலக இளையோர் நாள் சிறப்பிக்கப்படும் என்று திருத்தந்தை கூறினார். பனாமாவில் நடைபெற்ற உலக இளையோர் நாள் பற்றி நினைவுபடுத்திய திருத்தந்தை, அடுத்த உலக இளையோர் நாளுக்குத் தயாரிப்பாக, "இளைஞனே, நான் உனக்குச் சொல்கிறேன், எழுந்திடு (லூக்.7:14)", "எழுந்து நிமிர்ந்து நில். நீ என்னைக் கண்டது பற்றி சான்று பகர வேண்டும் (தி.ப.26:16)" ஆகிய இரு விவிலியப் பகுதிகளைத் தியானிக்குமாறு இளையோரைக் கேட்டுக் கொண்டார். லிஸ்பன் இளையோர் நாளுக்கும், இளையோர் பற்றி உலக ஆயர் மாமன்றத்திற்குப்பின் தொடரும் பயணத்திற்கும் நல்ல தொடர்பு உள்ளது என்றுரைத்த திருத்தந்தை, 2020 மற்றும் 2021 ம் ஆண்டுகளின் உலக இளையோர் நாள்களின் தயாரிப்புகளுக்கு, இந்த விவிலியப் பகுதிகள் உதவும் என்றும் இவை 2022ம் ஆண்டின் லிஸ்பன் இளையோர் நாள் தலைப்புக்கு இட்டுச் செல்லும் என்றும் தெரிவித்தார். ஆண்டவர் உங்களுக்கென தயார் செய்துள்ள பாதைகளை, எழுந்து பின்தொடர உந்தித்தள்ளும் கடவுளின் குரலை அணைத்து விடாதீர்கள் என்று கேட்டுக்கொண்ட திருத்தந்தை, அன்னை மரியாவைப் போன்று, அவரோடு ஒன்றித்து, உங்களின் அன்பையும் மகிழ்வையும் மற்றவர்க்கு ஒவ்வொரு நாளும் வழங்குங்கள் என்று, இளையோரிடம் கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர் பேனா...

# யார் காரணம்

"தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை", (லூக் 23/34) இது சிலுவையில் தொங்கியபோது இயேசுபிரான் தன்னை சிலுவை மரணத்திற்கு உள்ளாக்கியவர்களுக்காக கடவுளிடம் எழுப்பிய செபம். தற்போது தலைவிரித்தாடும் தண்ணீர் பஞ்சத்திற்கு 'யார் காரணம்' என்று கேள்வி எழுப்பி விவாதிப்பவர்களுக்காக 'தந்தையே இவர்களை மன்னியும்' என்று நாம் இறைவனிடம் குரல் எழுப்ப வேண்டும். கண் இருந்தும் குருடர்களாக, காதிருந்தும் செவிடர்களாக, உண்மையைப் பேச வழியில்லா ஊமையர்களாக, வக்கற்றவர்களாக நாம் மாற்றப்பட்டுவிட்டோம்.

இயற்கைச் சீர்குலைவால் வர இருக்கும் அச்சுறுத்தல்கள், பாதிப்புக்களைப் பற்றி ஐக்கிய நாடுகள் சபை முதல் கிராமச் சபைகள் வரை ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு மேலாகப் பேசப்பட்டு வருவதை மறுக்கமுடியாது. மரங்களை கட்டிப் பிடித்து வனங்களைப் பாதுகாக்கவும் (மேத்தாபக்கர்) நம் நாட்டிலேயே போராட்டங்கள் நடத்தப்பட்டன. புவி வெப்பமாவதைத் தடுக்க மரங்களை வளர்க்க வேண்டும்; தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் வாயுக்களை குறைக்கவேண்டும்; வாகன புகையை கட்டுப்படுத்த வேண்டும், நீர் ஆதாரங்களை பாதுகாக்க வேண்டும்; என்று முன் மொழியப்பட்டன. மூன்றாவது உலகப்போர் தண்ணீருக்காக நடத்தப்படும் என்று கூட எச்சரிக்கப்பட்டது. கடந்த ஆண்டுகளில் இயற்கையில் ஏற்படும் மாற்றங்களின் தாக்கங்களை அனுபவித்துக் கொண்டுதான் இருந்திருக்கிறோம். பாதிப்புக்களை சீர்படுத்துவதற்கு திட்டங்களை யோசித்து செயல்படுத்துவது அறிவுடைமை. ஆனால் தற்போதைய வறட்சிக்கும் குடிநீர் தட்டுப்பாட்டிற்கும் 'காரணம் யார்' என்று விவாதிப்பதும், கட்சியினர் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தி அரசியல் ஆதாய மடைய முயற்சிப்பதும் ஏற்புடையதல்ல. குடிநீர் தட்டுப்பாடே இல்லை, குடிநீர் தட்டுப்பாடு இருப்பதாக ஒரு மாயை உருவாக்கப் படுகிறது என்று ஆட்சியாளர்கள் பேசுவது "வெந்தப் புண்ணில் வேல் பாய்ச்சுவது" போலாகும்.

இயற்கை சீரழிவிற்கும், வறட்சிக்கும், குடிநீர் தட்டுப்பாட்டிற்கும் "யார் காரணம்?" என்ற கேள்வியால் எழும், பொது மக்களின் குமுறல்கள் நம் இதயச் செவிகளில் கேட்கின்றன. கடவுள் காரணமா? நிச்சயமாக இருக்க முடியாது. படைத்த அனைத்தையும் நல்லதெனக் கண்ட இறைவனும்; வாழ்வையும் சாவையும் முன்வைத்து அதில் எது தேவையோ அதனைத் தேர்ந்து கொள்ளும் மனச் சுதந்திரத்தை கொடுத்த கடவுள்; (தொ.நூ.1/28; 1/31; 2/15-17) மனிதனின் மனச் சுதந்திரத்திற்கு எதிராக செயல்பட முடியாத கடவுள் இயற்கை சீர்கேட்டிற்கும், வரட்சிக்கும் காரணமாக இருக்க முடியாது.

மக்கள் காரணமாய் இருக்க முடியுமா? இல்லை. அரசன் 'எவ்வழியோ அவ்வழியே குடிகளும்' என்பதுதானே வாழ்க்கை அனுபவம். படிக்காத பாமரன் மற்றும் பொருளாதார ஏழ்மையினால் வலுவற்று கிடப்பவரின் அனுபவ ஞானம் புறம் தள்ளப்படுவது எதார்த்த உண்மை. "ஏழைச் சொல் அம்பலம் ஏறுமா?" படித்த பட்டதாரிகளும், திட்டச் செயலாளர்களும் ஆட்சியாளரின் எண்ணங்களைப் பிரதிபலிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால், அவர்களின் படிப்பறிவும், ஆய்வு முடிவுகளும், பயனற்றதாகக்கப்படுகின்றன. இயற்கைப் பாதுகாப்பு பற்றி பேசினாலும் செயல்பட்டாலும் தேசத்துரோகி என்று முத்திரையிடுவதும் அவர்கள் கருத்துக்கள் வெளிவராமல் இருட்டடிப்புச் செய்யப்படுவதும் நடைமுறையாகிவிட்டது.

ஆசையைத் தூண்டியெழுப்பி, நுகர்வுக் கலாச்சாரத்தில் மூழ்கடித்து, மக்களை தங்களின் விருப்பத்திற்குப் பணியச் செய்பவர்கள் காரணமாய் இருக்க வாய்ப்பு உண்டு. ஊடகங்களைப் பயன்படுத்தி உண்மைக்கு முரணான தகவல்களை நம்பச் செய்பவர்கள் இயற்கை சீர்கேட்டிற்கு காரணமாகலாம். ஆடை முதல் ஆயுதம் வரை விற்பனையாக வேண்டும் என்பதற்காக நாடுகளுக்கிடையே பகைமையை உருவாக்குபவர்கள்; தண்ணீர் முதல் தங்கம் வரை தங்கள் கட்டுப்பாட்டில்தான் புழக்கத்தில் இருக்க வேண்டும் என்று தீர்மானிப்பவர்கள்; உணவே உயிர் கொல்லியானாலும் உயிருக்கு காப்பீடு செய்யத் தூண்டுபவர்கள்; உற்பத்தியாகும் உணவுப் பொருளில் இருந்து உயிர் காக்கும் மருந்துவரை தங்கள் பிடியில் இருக்க வேண்டும் என்று செயல்படுபவர்கள் போன்ற சுயநல கோட்டீஸ் வரர்கள் இயற்கைச் சீர்கேட்டிற்கும், புவிவெப்பமாவதற்கும், வறட்சிக்கும், குடிநீர் தட்டுப்பட்டிற்கும் பொருப்பானவர்கள். இவர்களே உலகப் பொருளாதாரத்தை கட்டுப்படுத்துபவர்கள். இவர்களுக்கு ஆட்சிப்பொறுப்பில் இருப்பவர்கள் துணை நிற்பவர்கள்.

மக்களின் ஏழ்மையையும், அடிமையையும், இயலாமையையும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்வதிலே நம்மால் தேர்வுசெய்யப்பட்ட பெரும்பாலான மக்கள் பிரதிநிதிகள் கைதேர்ந்தவர்கள். பொருளாதாரத்தை பிடியில் வைத்திருக்கும் பண முதலைகளுக்கு ஏற்றபடி சட்டம் தீட்டி செயல்படுத்த துணை நிற்பார்கள். நம் மக்கள் பிரதிநிதிகளை குற்றம் சுமத்துவதால் பயனேதும் இல்லை, என்றாலும் எதார்த்தத்தைச் சொல்வதே நம் நோக்கம்.

அரசுக்குச் சொந்தமான, இலட்சக்கணக்கான ஏக்கரில் இருந்த இயற்கை வளங்களை அழித்து யூக்கலிப்டஸ் மரக் காடுகள் உருவாக்கப்பட்டது. இது மக்கள் பிரதிநிதிகளுக்கு தெரியாமல் நடக்க வழியுண்டா? இக்காடுகள் காற்றிலும் பூமியிலும் இருக்கும் நீரை உருஞ்சி வரட்சியை உருவாக்கும் என்பது அவர்களுக்குத் தெரியாதா?. கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், உளுந்தூர்பேட்டை போன்ற பகுதிகளில் இருந்த இயற்கைக் காடுகள் எங்கே? சங்கரபுரம் தொன்னலூர் பகுதியில் இருந்த காடுகளில் ஊற்றெடுத்து கெடிலம் ஆறாக பெருக்கெடுத்த ஆறு எங்கே? ஏரிகளிலே கருவேல மரங்களை நட்டு வளர்க்க அனுமதி கொடுத்தவர்கள் யாராக இருக்க முடியும்? ஏரிகளும் நீர் நிலைகளும் தூர்ந்துபோகவிட்டு, அவற்றை அரசு தேவைக்காகவும், அரசியல் தேவைக்காகவும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுவதும், ஆக்கிரமிப்புகளை அதிகாரிகள் கண்டு கொள்ளாமல் இருக்க, எழுதப்படாத சட்டத்தைக் கொடுக்க, யாரால் முடியும்.

*"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்*
*வான்இன்று அமையாது ஒழுக்கு"* (குறள் 20)

என்ற எச்சரிக்கை, நம் பிரதிநிதிகளின் காதுகளில் விழவில்லை போலும். இப்போதெல்லாம் மழை பெய்வது அரிதாகிவிட்டது; அப்படியே மழைப் பெய்தாலும் ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டி நிலத்தடி நீர் உயரச் செய்யலாம். நடுவண் அரசுக்கும், மாநில அரசுக்கும் நாம் தேர்ந்தெடுத்த மக்கள் பிரதிநிதிகள் ஒரு சிலரைத் தவிர பெரும்பாலானோர் மக்கள் நலத்தில் அக்கரைக்காட்ட சுனக்கம் உடையவராக இருப்பது வேதனைக்குறியது. கோடீஸ்வரர்களுக்கு துணை போகும் இவர்கள் இயற்கை சீழ்கேட்டிற்கும், குடிநீர் தட்டுப்பாட்டிற்கும் காரணமாவர். இவர்கள் உதவி இன்றி கோட்டீஸ்வரர்களுக்கு சாதகமான திட்டங்கள் தீட்டவும், செயல்படுத்தவும் முடியாது.

மழையின்மைக்கு, குடிநீர் தட்டுப்பாட்டிற்கு யார் காரணம் என விவாதிப்பது வேதனைக்குறியது. மக்கள் குடிப்பதற்கும், அன்றாடம் புழங்குவதற்கும் தண்ணீர் இன்றி தவிக்கின்றார்களே என்று ஆட்சியாளர்கள் இப்போது பேசுவது "ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுவது போல" இருக்கின்றது. 'தந்தையே இவர்களை மன்னியும்'

உண்மையாகவே இவர்களுக்கு மக்கள் மீது அக்கறை இருப்பின் ஒரு கட்சி பிறகட்சிகளை குறைகூறுவதை நிறுத்தட்டும். ஆளும் கட்சி எதிர் (எதிரி) கட்சி என்ற வேற்றுமை, வெறுப்பு மனப்பான்மையை விட்டொழிக்கட்டும். மையத்தில் ஆட்சி செய்யும் அரசு, மாநிலத்தில் ஆட்சி செய்யும் அரசு என்ற மேலாண்மை ஆதிக்க வேர்களை அறுக்கட்டும். ஆட்சி அதிகாரத்திற்காக தேசியம் பேசுவதைவிடுத்து, சுதந்திரத்திற்காக வேதனை துன்பங்களை அனுபவித்த விடுதலை வீரர்களின் பரந்துபட்ட தேசபக்தி செழிக்க வழிவகுக்கட்டும். பண்மைத் தண்மையை மதித்து ஒற்றுமை மனப்பாண்மையை வளர்க்கட்டும். பல்வேறு வழிபாட்டு முறைகளுக்கு மத்தியில் 'ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்' என்ற பாசப் பிணைப்பை உருவாக்கட்டும். மாநிலம், மொழி, மதம், ஜாதி என்பவற்றை ஒரு மாலையை அழகு படுத்தும் பல வண்ண மலர்களாகக் கருதட்டும். அவற்றை அரசியலுக்காக பயன்படுத்த வேண்டாம். மக்கள் மத்தியிலே மனிதத்தை மதிக்கும் தர்மம் செழிக்க வழிவகுக்கட்டும். சட்டப் பேரவையும், பாராளு மன்றமும், மக்களின் நலனுக்காகவும், வளமைக்காகவும் திட்டங்களை விவாதிக்கும் அமைப்புகளாக கண்ணியம் காக்கப்படட்டும். மக்கள் பிரதிநிதிகள் தங்களைத் தேர்ந்தெடுத்தவர்களின் நம்பிக்கைக்கு உரியவர்களாக செயலாற்றட்டும். சுயநலப் போக்கை கைவிட்டு 'தவிக்கும் வாய்க்கு தண்ணீர் கொடுக்கும் புண்ணியவான்களாக மாறட்டும்'. "உலகம் எல்லாம் நெருப்பினால் வேக மனிதர் எல்லாம் செத்துப் போவார்கள்" என்னும் சாமியின் கோபம் தனியச் செய்யும் சான்றோராகட்டும்.

**மழையின்மைக்கும், வறட்சிக்கும், பேராசையும், அக்கறையற்ற அலட்சியமும்தான் காரணம். எனவே இயற்கையை பாதுகாக்க அக்கறை கொள்வோம். பேராசை தவிர்த்து பொதுநலம் காப்போம்.**

வாரச் சிந்தனை

ஆண்டின் பொதுக்காலம் 14ம் ஞாயிறு (07-07-2019) எசா.66:10-14இ; கலாத்.6:14-18, லூக் 10:1-12,17-20

# "வாழ்க்கையே நற்செய்தியாக"

அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுவை.



**நா**ம் இயேசுவின் சீடராய் வாழ்வதற்கும், ஆன்மீக வாழ்க்கைக்கும் சாக்குபோக்கு கூறக்கூடாது என்று கடந்த வார நற்செய்தி வாசகத்தின் வழியாக அறிந்து கொண்டோம். இன்றைய நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசு எழுபத்திரண்டு பேரை நியமித்து நற்செய்தி பணிக்காக இருவர் இருவராக பல்வேறு ஊர்களுக்கும் இடங்களுக்கும் அனுப்புகிறார். இயேசு உண்மையாகவே சீடர்களிடம் நீங்கள் இவ்வாறு வார்த்தைகளை உச்சரிக்க வேண்டும், சைகை காட்ட வேண்டும் என்று கூறியிருக்க வேண்டும். ஆனால் இயேசு சீடர்களிடம் நற்செய்தியை எப்படி அறிவிக்க வேண்டும் என்பதைவிட நற்செய்தியை எப்படி வாழ்ந்து காட்ட வேண்டும் என்று இன்றைய நற்செய்தியில் அறிவுரை பகிர்கின்றார். இதைத்தான் இன்றைய ஞாயிறு திருவழிபாடு வழியாக அறிந்து கொள்கின்றோம்.

**கடவுளின் பராமரிப்பு:** இயேசு சீடர்களிடம், "பணப்பையோ வேறு பையோ மிதியடிகளோ எதுவும் நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டாம்" என்கிறார். இதன்மூலம் இயேசு சீடர்களின் நம்பிக்கை முழுவதும் தங்கள் சொந்த ஆற்றல் மீதோ, பணம், பொருள், வசதிகள் மீதோ, தங்களை ஏற்றுக் கொள்ளும் மக்கள் அல்லது ஊர்கள் மீதோ அல்லாமல் கடவுள் மீது, கடவுள் நம்மை ஒவ்வொரு நாளும் பாதுகாத்து வழிநடத்தி வருகிறார் என்று கடவுளின் பராமரிப்பின் மீது அமைய வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறார். இதனால்தான் இயேசு, "உயிர் வாழ எதை உண்பது, எதைக் குடிப்பது என்றோ, உடலுக்கு எதை உடுத்துவது என்றோ நீங்கள் கவலை கொள்ளாதீர்கள். வானத்து பறவைகளை நோக்குங்கள்; அவை விதைப்பதுமில்லை; அறுப்பதுமில்லை; களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் விண்ணகத்தந்தை அவற்றுக்கும் உணவு அளிக்கிறார். அவற்றைவிட நீங்கள் மேலானவர்கள் அல்லவா?" (மத்.6:25-26) என்கிறார்.

**அமைதியின் தூதனாய்:** இயேசு அனுப்பிய சீடர்கள் "எந்த வீட்டிற்குள் சென்றாலும் இந்த வீட்டிற்கு அமைதி உண்டாகுக" என முதலில் கூறும்படி கேட்கின்றார். இங்கே குறிப்பிடப் படுகின்ற 'அமைதி' என்னும் சொல் வழக்கமான வாழ்த்துச் சொல் மட்டுமல்ல, சண்டை சச்சரவு இல்லாத நிலை என்பது மட்டுமல்ல. மாறாக இயேசு குறிப்பிடுகின்ற 'அமைதி' அவர் வழங்கும் 'மீட்பை' குறித்துக் காட்டுகின்றன. கடவுள் தம் மக்களைத் தேடி வந்து அவர்களுக்கு முழு நலன் வழங்கி, அவர்களை கடவுளோடு உறவாடச் செய்கின்ற நிலையே 'அமைதி' ஆகும். இயேசு வழங்குகின்ற அமைதியும் நல்வாழ்விற்கான மீட்பும் அவருடைய சீடர்கள் (நம்) வழியாக எல்லாருக்கும் எப்போதும் பறைசாற்றப்படுகிறது. கடவுளின் கொடையை விரும்பி ஏற்போர் உள்ளத்தில் உண்மையான மாற்றம் நிகழும். அவர்களும் கடவுளோடு அமைதியில் இணைந்து மகிழ்ச்சியடைவார்கள். எனவே கடவுளின் அமைதியை நல்மனத்தோடு ஏற்காத மனிதருக்கு எந்தவொரு பயனும் ஏற்படாத லூக்கா எழுதிய நற்செய்தி நூலிலும் திருத்தூதர் பணிகள் நூலிலும் 'குடும்பம்' அல்லது 'வீடு' என்னும் கருத்து மிக முக்கியமானது. அதாவது தொடக்ககால திருஅவை நற்செய்தி பணி ஆற்றியது தொழுகை கூடங்களிலோ, ஆலயங்களிலோ அல்ல. மாறாக வீடுகளில் மக்கள் கூடி வந்து, ஒரு குடும்பமாக இணைந்து, இறைவேண்டலில் ஈடுபட்டார்கள், கடவுளின் வார்த்தைக்கு செவிசாய்த்தார்கள், நற்கருணை விருந்தை கொண்டாடினார்கள். இவ்வாறு குடும்பம் அமைதியைப் பெறும்பொழுது அந்த குடும்பத்திற்கு, அந்த ஊருக்கு, சமுதாயத்திற்கு, நாட்டிற்கு மீட்பு தரப்பட்டுள்ளது என்று பொருள். எனவே இயேசுவின் சீடராய், அமைதியின் தூதனாய் மாறுவோம்.

**கவனம் தேவை இக்கணம்:** இன்றைய நற்செய்தியில் இயேசு சீடர்களுக்கு கொடுத்த அறிவுரைகளில் நம் கவனத்தை ஈர்ப்பது வியப்பைத் தருவது, "வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம்" என்பது. இயேசு பிறருக்கு வணக்கம் செலுத்துவது, மரியாதை கொடுப்பது போன்ற பண்புகளுக்கு எதிரானவர் அல்லர். பின் ஏன் இந்த அறிவுரையைத் தந்தார்? என்ற இக்கேள்விக்கான விடை அறிவுரையின் முதல் வாக்கியத்தில் உள்ளது. "அறுவடை மிகுதி, வேலையாட்களோ குறைவு" ஆம் குறைவான எண்ணிக்கையில் உள்ள சீடர்கள், நிறைய மக்களுக்கு நற்செய்தியை அறிவிக்க வேண்டும். எனவே, குறைவான நேரம், நிறைய பணி. இவ்வாறு வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்தி அதன் மூலம் நேரத்தை வீணடிக்க வேண்டாம், விரைந்து பல இடங்களுக்கு சென்று நற்செய்தியை அறிவியுங்கள் என்கிறார். நாமும் பல நேரங்களில் நமது அலுவகங்களில், பணியிடங்களில் பேசியே நேரத்தை செலவழிக்கிறோம், பொறுப்புகளில் கடமைகளில் தவறியிருக்கின்றோம். அரட்டை அடிக்க, பொழுதுபோக்குக்கு நிறைய நேரம் செலவழிக்கிறோம். ஆன்மீக வாழ்க்கையை தட்டி கழித்திருக்கிறோம். இத்தகைய தவறான பழக்கங்களை மாற்றி கடமைகளில் பொறுப்பாய் செயல்பட்டு, கடவுளின் பணியின் மேல் முழு கவனம் செலுத்த முயற்சி செய்வோமா?

**வீண்பெருமை வேண்டாமே!:** மனிதன் விளம்பரப் பிரியனாக மாறிக்கொண்டிருக்கிற காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தன் பெயரை எங்கேயாகிலும் எழுதி நிலை நாட்ட விரும்புகிறான். தன் புகைப்படம், தன் பெயர் பொறிக்கப் பட்டிருப்பதைக் காணலாம். திறப்பு விழாக்களிலும், பள்ளி, கல்லூரி, நிறுவனங்களின் கட்டங்களில் உள்ள கல்வெட்டு களிலும் பெயரை பதிவு செய்வதைப் பார்க்கிறோம். இவற்றையெல்லாம் எதிர்பார்ப்பது மனித இயல்பு, மனித பலவீனம். அதே போல எழுபத்திரண்டு சீடர்களும் திரும்பி வந்து இயேசுவிடம் தாங்கள் செய்தவை போதித்தவற்றைப் பற்றி அருமை, பெருமைகளை மகிழ்வுடன் தெரிவிக்கின்றனர் இயேசு அவர்களிடம் "உங்ள பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்பது பற்றியே மகிழுங்கள்" என்கிறார். எனவே வீண் பெருமை வேண்டாமே!

**வாழ்க்கையே நற்செய்தியாக:** கைகளில் விவிலியத்தை ஏந்தி நற்செய்தியை அறிவித்த காலம் போய், நம் சிந்தனை, சொல், செயல்கள் வழியாக, அதாவது நமது வாழ்க்கையின் வழியாக நற்செய்தியை அறிவிக்க வேண்டிய காலக் கட்டத்தில் இருக்கிறோம். வார்த்தைகளால் பேசிக் கொண்டிருப்பவர்களைவிட, செயல்களினால் வாழ்ந்து காட்டுபவர்களைத்தான் உலகம் உயர்வாக, மதிப்பிற்குரிய வர்களாக கருதுகின்றது. பிறர்க்கு எடுத்துக்காட்டுகளைக் கூறி விளக்கம் அளிப்பதைவிட நாமே எடுத்துக்காட்டுகளாக மாற அழைக்கப்படுகிறோம். நம் வாழ்க்கையே நற்செய்தி யாக மாறும்போது, எதிர்ப்புகள், ஏமாற்றங்கள், நிராகரிக்கப் படுதல் போன்றவை எழும். இவற்றைக்கூட நாம் சந்திக்கத் தயாராயிருக்க வேண்டும் என்று இயேசு எச்சரிக்கின்றார். நம்முடைய உழைப்புக்கும், இழப்புக்கும் பிறரிடமிருந்து எவ்விதப் பயனும், கைமாறும் கிடைக்காவிட்டாலும், தந்தையாகிய கடவுள் என்றுமே கைவிடவே மாட்டார். இன்று வாழ்க்கைச் சூழல், அழைத்தலுக்கு ஏற்ப, நாம் எந்த அளவிற்கு இறையரசுப் பணியை ஆற்றுகின்றோம்? சிந்திப்போம், செயல்படுவோம். ●



# சரிந்த சர்வாதிகாரிகளின் சரிதை

Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

"தீயோரைத் தீவினையே கொல்லும். நேர்மையாளரை வெறுப்பவர் தண்டனை பெறுவர்" (தி.பா. 34 :21)

எந்த சர்வாதிகாரியும் தங்கள் வாழ்வின் இறுதியில் நல்லதொரு முடிவைக் கண்டதில்லை என்பதுதான் உலக வரலாறு கூறும் உணமை.

கிறிஸ்தவ சமயத்தை அழிக்கத் தேடியவர்கள், மற்றும் ஒரு குறிப்பட்ட இனத்தை அழிக்கத் தேடியவர்கள் எப்படி மடிந்தார்கள் என்று பார்ப்போம்.

**1. ஏரோது அந்திப்பாஸ்:** யூதேயா நாட்டுக் குறுநில மன்னனான இவன் ஏரோதியாளின் மகளான ஒரு சிறுமிக்குக் கொடுத்த வாக்கைக் காக்கப் புனிதரான திருமுழுக்கு யோவானின் தலையை வெட்டச் செய்த கொடியவன். இவன் கி.பி. 39-ஆம் ஆண்டில் தனது 69-ஆம் வயதில் புதிய உரோமைப் பேரரசனான Caligula-வுக்கு எதிராக ஆட்சியைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்ததாக ஏரோதியாளின் சகோதரனான அக்கிரிப்பாவால் காட்டிக்கொடுக்கப்பட்டு, Gaul என்னும் நாட்டுக்கு அதாவது இப்போதுள்ள Lyon என்ற ஊருக்கு ஏரோதியாளோடு நாடு கடத்தப்பட்டான். அங்கே கொடிய நோயால் பாதிக்கப்பட்டு இறந்தான். ஏரோதியாளோ கி.பி. 40-இல் இறந்தாள். அவளுடைய இறப்பு குறித்து வரலாற்று ஆசிரியர்கள் எதுவும் கூறவில்லை.

**2. சலோமே:** கொடியவளான ஏரோதியா பெற்ற கொடு வாள்தான் இந்த சலோமே. மனித தலையை இரத்தம் சொட்டச் சொட்ட தட்டில் வாங்கியபோது அதிர்ச்சியால் சாகாதவள் எப்படி ஆற்றில் இறந்தாள்? குளிர்காலத்தில் ஆற்று நீர் பனிக்கட்டியாக உறைந்துபோய் தரைக்கும் தண்ணீருக்கும் வேறுபாடின்றி இருந்தது. அப்போது அதன் மீது நடந்த சலோமே ஆற்றுக்குள் மூழ்கிவிட்டாள். பனிப்பறைக்குக் கீழ் அவளுடைய உடல் குளிரால் நடனமாட, உயிர் போராட பனிப்பாறை அவளுடைய கழுத்தை நெறுக்கித் துண்டித்தது. இருப்பு வாளல்ல இளகிய தன்மையுள்ள நீரே கொடிய வாளாக மாறியது. தெய்வ நீதிக்குத் தப்ப முடியுமா?

**3. போந்தியூஸ் பிலாத்து :** உரோமை ஆளுநன். இயேசுவைச் சிலுவையில் அரைந்து கொல்ல தீர்ப்பு அளித்தவன். உரோமைப் பேரரசன் Caligula என்பவனால் நாடுகடத்தப்பட்டு கொல்லப்பட்டான் என்றும் நாடுகடத்தப்பட்ட ஊரில் தற்கொலை புரிந்துகொண்டு மாண்டான் எனவும் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். அவனது உடல் டைபர் நதியில் எறியப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

**கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படல்:** இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட ஆண்டிலிருந்து முந்நூறு ஆண்டு கள் வரை கிறிஸ்தவர்கள் பலவாறு துன்புறுத்தப்பட்டார்கள். கிறிஸ்தவத்தின் ஆரம்ப காலத்தில் உரோமை நகரில் துன்புறுத்தப்பட்டதை மட்டும் சுருக்கமாகப் பார்ப்போம். முந்நூறு ஆண்டுகளுக்குப்பின் கோன்ஸ்டான்டின் பேரரசன் சிலுவையின் அடையாளத்தால் எதிரி அரசன் மீது வெற்றி கொண்ட பின்னர், அவன் கிறிஸ்தவனானது மட்டுமல்ல கிறிஸ்தவர்கள் சுதந்திர மாக வாழ உரிமையும் வழங்கினான். கி.பி. 313-இல் மிலான் உடன்படிக்கை கிறிஸ்தவம் சட்டப்படி உரோமைப் பேரரசின் சமயமாக அறிக்கையிட்டது.

எத்தனை மக்கள் வேதகலாபனையில் உயிர் இழந்தார்கள் என்று வரலாற்று ஆசிரியர்களால் கணிக்கப்படவில்லை. பலர் மிகுந்த துணிவோடு இயேசுவுக்குச் சான்று பகர்ந்து உயிர்கொடுத்தார்கள் மற்றும் சிலர் வேதனைகளுக்கு அஞ்சி விசுவாசத்தை மறுதலித்தும் உள்ளனர்.

வரலாற்று ஆசிரியரான தெர்த்துலியன் **"மறைசாட்சியரின் இரத்தம் கிறிஸ்தவத்தின் வித்து"** என்று எழுதியுள்ளார். அது மிகவும் உண்மை. எங்கு கிறிஸ்தவம் அதிகம் துன்புறுத்தப்பட்டதோ அதே உரோம் நகரில்தான் இன்று கிறிஸ்தவத்தின் தலைமைப் பீடமே அமைந்துள்ளது. கிறிஸ்தவத்தைத் துன்புறுத்தியது அந்த சமயத்தை மிக வேகமாக வளரச் செய்தது. திரு அவையைச் சிறந்த சட்ட திட்டங்களோடு ஒரு பலம் வாய்ந்த நிறுவனமாக்கியது, ஒரே தலைமைக்குக் கீழ் உலகெங்கும் பரவியுள்ள அனைத்துக் கிறிஸ்தவர்களையும் வழி நடத்தும் ஒரு நிறுவனமாக உள்ளது.

**கிறிஸ்தவம் துன்புறுத்தப்படுவதன் காரணங்கள் எவை?**

இயேசுவின் தலைமை (அரசு) சீசருடைய அரசுக்கு எதிரி என்ற அச்சம் ஒரு புறம். மறுபுறம் உராமைப் பேரரசர்களுக்குப் பிரமாணிக்கமாக இருக்கும் எவரும் வேறு ஒரு தெய்வத்தை வழிபடலாகாது. கிறிஸ்தவம் போதிக்கும் ஒரே கடவுள் என்னும் கொள்கையை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சிலைவழிபாட்டைக் கிறிஸ்தவர்கள் புறக்கணித்தார்கள். எனவே கிறிஸ்தவர்கள் தங்கள் வழிபாடு செய்ய தடை விதிக்கப்பட்டது.

கிறிஸ்தவர்கள் பொது இடங்களில் நடத்திவந்த வழிபாடுகளைத் தவிர்த்து வீடுகளிலும் குகைகளிலும் சுரங்கங்களிலும் தங்கள் வழிபாடுகளை நடத்தினார்கள்.

உரோமைப் பேரரசில் 71 பேரரசர்கள் உரோமையை ஆண்டனர். அவர்களில் ஒரு சில சர்வாதிகாரிகளின் இறப்புப் பற்றி மட்டும் பார்ப்போம்.

**4. திபேரியூஸ் க்ளாடியுஸ் நீரோ:**

இவன் உரோமையை ஆண்ட 71 பேரரசர்களில் இரண்டாவது பேரரசன் ஆவான். கி.பி. 14 செப்டம்பர் 18 முதல் கி.பி. 37 மார்ச் 16 வரை ஆண்டவன். Caligula-க்கு அடுத்து வந்தவன். இவன் சோகமும் கொடிய இயல்பும் கொண்ட ஒரு மனநோயாளி. இவன் உரோமை நகரைப் புதுப்பித்து அமைக்கத் திட்டமிட்டான். அதற்குப் பல கட்டடங்களை இடிக்க வேண்டும். மக்கள் அதை விரும்ப மாட்டார்கள் எனவே அந்தக் கட்டடங்களுக்குத் தீவைக்கக் கட்டளையிட்டான். அந்தப்பழியைப் புதிதாகத் தோன்றிய கிறித்தவ மதத்தைச் சார்ந்தவர்கள் மீது போட்டான். எனவே கிறிஸ்தவர்களை வீதியோரக் கம்பங்களில் கட்டித் தீ வைக்கச் செய்தான். அதைத் தன் அரண்மனையின் மாடியில் இருந்துகொண்டு ஃபிடில் வாசித்து இரசித்தான்.

Gaul, Spain நாட்டு ஆளுநர்கள் இவனை மனித இன விரோதி எனக் கூறி மரண தண்டனை விதித்தனர். கைது செய்யப்பட இருந்த நேரத்தில் தற்கொலை செய்து கொண்டான். அதாவது கி.பி. 68, ஜுன் 9-ஆம் தேதி தானே தன் கழுத்தை அறுத்துக்கொண்டு மாண்டான்.

**5. ஜூலியஸ் சீசர்:** இவன் வலிமையாக ஆட்சி புரிந்தான். ஆனால் சர்வாதிகாரியாக இருந்தான். கி.பி. 44-இல் தன் அரியணையில் இருக்கும்போதே அமைச்சரவை உறுப்பினரால் ஒட்டு மொத்தமாக ஒரே சமயத்தில் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டான்.

**6. தியோக்லேசியன்:** தியோக்லேசியன், மாக்ஸ்மியன் இருவரும் கி.பி. 308-இல் ஆட்சிபுரிந்தனர். இவர்கள் கிறிஸ்தவர் களை அதிகம் துன்புறுத்தினர். இவர்களுக்கு எதிராக லிசினியுஸ் என்பவன் பேரரசனாக நியமிக்கப்பட்டான். எனவே மனமுடைந்த தியோக்லேசியன் தற்காலை புரிந்துகொண்டு மாண்டதாக வரலாறு கூறுகிறது. சிறிது காலத்துக்குப் பின் மாக்ஸ்மியனும் தற்கொலை புரிந்துகொண்டான்.

**7. கலேரியுஸ்:** இந்தக் கொடியவனும் கொடிய நோயால் பீடிக்கப்பட்டு கி.பி. 311 மே மாதத்தில் இறந்தான்.

**8. கலியேனூஸ்:** இவன் கலிலேயாவைச் சேர்ந்தவன். தன் தந்தை வலேரியனுடன் உரோமைப் பேரரசனான். இவனும் கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்தியவன். கி.பி. 258-இல் தன் படைவீரர்களாலேயே கொல்லப்பட்டான்.

**9. வலேரியன் :** இவனுடைய மரணம் மிகவும் கொடூரமானது. இவனை வெற்றி கொண்ட ஷாப்பூர் என்ற மன்னன் குதிரைமீது ஏறும்போதெல்லாம் வலேரியனைத் தன் கால்மணையாக வைத்து ஏறியதாக வரலாறு கூறுகிறது. இறுதியில் தோலுரிக்கப்பட்டு பல நாட்கள் உயிருடன் கிடந்து இறந்தான். இன்னும் பலரும் கொடிய முடிவைச் சந்தித்தனர்.

முற்றும்



# கலைமிகு செபம்

– சுவாமி ஆ. லூயிஸ்.

**க**லைகளின் கொடுமுடியாய் விளங்குவது செபம் என்று நாம் பெருமிதம் கொள்வதுபோல, அக்கலையில் வெற்றி பெறுவதற்கு அவரின் அருளை என்றும் நம்புவோம். ஏனெனில் அவரின் ஆவிதான் நமக்குள் இருந்து நம்மை அப்பா, பிதாவே என்று பாசத்தோடு குரல் கொடுக்கத் தூண்டுகிறது. செபக் கலையில் பலவிதம் உண்டு: தனிசெபம், குழு செபம், பொது செபம், கட்டளை செபம், நவநாள் செபம், திருவிழா செபம், மனச்செபம், இயேசு செபம், நாம செபம், காட்சி செபம், தியான செபம் என்று ஒவ்வொருவருக்கும் ஏற்றவாறு செபம் வேறுபடும், ஆவியில் ஒன்றுபடும். மெய்மையின் மீது இருக்கும் தாகம், வேகம், ஆர்வம் ஒவ்வொருவரையும் செபிக்கத் தூண்டும். தனிசெபம் குழு செபத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும் குழு செபம், தனி செபத்திற்கு அழைத்து செல்லும். ஒன்றை ஒன்று நிறைவு செய்வதில் நாம் முழுமையையும், புனிதத்தையும் அறுவடை செய்கின்றோம்.

**பக்தி செபம் :** அன்பு உறவை நாடும்; எனவே பக்தியில் குறைந்தது இருவர் இருப்பர். உடனடியாக பக்தி முக்தியை அடையாது. காலப்போக்கில் வளர்ந்து முழுமை அடையும். பக்திக்கு உடல் அடித்தளமாக அமையலாம், உள்ளமும் சந்திக்கும் இடம் ஆகலாம், முழுமையாக உயிர் ஆதாரமாக அமையலாம். மெய்யான, நிரந்தரமான அன்பு உயிர் என்னும் ஆவியில் இடம் பெறுவது நிரந்தரம், மற்றவை தற்காலிக மாகும். மெய்யான பக்தி செபம் இயேசுவின் அன்பில் நிலைத்திருக்கும். இயேசுவில் தான் நமது அன்பு நிறைவு பெற இயலும். இயேசுவின் அன்பை மறந்திடுவாயோ மனிதப் பண்பிருந்தால் என்று அவரின் அன்பில் என்றும் நிலைத் திருப்போம் அது தெய்வீகமும் முழு மனித நேயத்தையும் கொண்டது என்று அன்பின், பக்தியின் களமரங்கி அன்றாடம் அனுபவிப்போம்.

**ஞான செபம் :** கடவுள் ஒருவர்தான் முழுமையான நிறைவான மெய்மை, மற்றதெல்லாம் அம்மெய்மையின் வெளிப்பாடுகள். எனவே அவரில் நாம் இரண்டாக இல்லாது ஒன்றாகிவிடுவோம். நதிகள் கடலில் கலப்பதுபோல நாம் அவரில் நம்மை இழந்து அவராகிறோம். இதற்குத் துணையாக, தூண்டுதலாக அமைதி தியானம் நமக்கு உதவுகிறது. இந்நிலையில் விழிப்புணர்வே முக்கியமாகும். அவரோடு நான் என்னோடு அவர் என்பது ஒன்றில் சலனமற்று, அசைவின்றி, உணர்வின்றி, சிந்தனை இன்றி சுவாசத்தில் மட்டும் கவனம் செலுத்தி, நம் ஆவியும் தூய ஆவியும் இணைந்துவிட்டால் ஆனந்தம் ஆனந்தமே! மூவேளை தியானம் நாள் முழுவதும் நமக்கு நன்மை புரியும்.

**செயல் செபம் :** இருப்பது மட்டும் பெரிதல்ல, இயங்குவதும் இயல்பாகும். படைப்பு, மீட்பு, புனிதப்படுத்தல் என்ற மூவித இயக்கத்திலும் இறைவனைப் போல, இயேசுவைப் போல, ஆவியில் இயங்குவது எவ்வளவு மேலானது. செயலில்லா நம்பிக்கை இறந்த நம்பிக்கையாகும். ஈடுபாடு என்ற செயல்பாட்டிலிருந்து தன்னை யாரும் விலக்கிக் கொள்ள இவண் இடமில்லை. இறைவன்தான் நிரந்தரமாக செயலாற்று பவர், நாம் எல்லாம் அவருடைய கருவிகள்தான். நமது கடமை நல்ல மரமாக அவரில் அவரோடு இருத்தல் ஆகும். கனிகொடுப்பது ஆவியின் கொடையாகும்.

**தனி செபம் :** ஒவ்வொருவருக்கும் கடவுள் தன்னைப் போலவே ஒரு தனித்தன்மையைக் கொடுத்து வருகிறார். இதை உணர்வுடமை என்ற நிலையில் வளர்ப்பது ஒவ்வொரு வருடைய பொறுப்பாகும். இதற்குத் தேவையான அருளை அவரே அளிப்பார், நாம் தாகத்தோடு நாடி தேட வேண்டும். தாகத்திற்கு ஏற்ப அருள் வெள்ளம் ஒருவரில் இடம் பெறும். தாகமாய் இருப்போர் எம்மிடம் வருக, பருகுக! தனி செபத்தில்தான் கடவுளைத் தேடலாம், அல்லது கடவுள் தன்னைத் தேடி வரலாம். இறைவனுடைய சாயல் நாம், சாயல் மெய்மையாக நாம் தியானத்தின் வழி மெய்மையோடு ஒன்றுபடுகிறோம். தனி செபம் எங்கும் எப்போதும் நாம் செய்ய இயலும். இறைப்பிரசன்ன உணர்வை நாம் வளர்த்து அதிலே நிலைத்திருந்தால் வாழ்வு செபமாகும், செபம் வாழ்வாகும். இப்படிப்பட்ட செப உணர்வின் வாழ்வின் அன்றாடப் பயணத்தில் நாம் வாழ்வது, அனுபவிப்பது, பகிர்ந்து கொள்வது, சான்று பகர்வது எவ்வளவோ இனிமையானது என்று அருட்பா துணைகொண்டு தொடர அழைப்புண்டு.

**குழு செபம் :** இருவர் மூவர் என் பெயரால் கூடி வரும்போது அவர்கள் மத்தியில் நான் இருக்கிறேன் என்ற அடிப்படையில் குழு செபம் இடம் பெறுகின்றது. தமத்திருத்துவத்தின் அடித்தளமே குழு செபத்திற்குப் புனிதம் தருகிறது. எனவேதான் குடும்ப செபம், துறவிகள், குருக்களின் குழு செபம் எவ்வளவு பொருள் பெறுகின்றது என்று மக்களோடும் குழு செபங்களைப் பொதுவில் மேற்கொள்வது எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்து மக்களை சிறுக் குழுக்களாக, அடிப்படைக் கிறிஸ்தவக் குழுக்களாக கட்டி எழுப்புவது மேலானது. இதற்கு பல வாய்ப்புகள் உண்டு. பயன்படுத்தி தயாரித்து குழு செபத்தை மேற்கொண்டால் மிகவும் பயனுள்ளதாக அமையும். குழு செபத்தில் ஈடுபடும் போது ஒருவர் ஒருவருக்கு செபிக்கத் துணையாக, தூண்டுதலாக இருக்கிறோம். குழு செபம் இரணடும நமத கண்களாகும்.

**பொது செபம் :** கிறிஸ்தவர்கள் ஒன்று கூடும்போது பெரியவர்கள், இளையோர், சிறுவர்கள், பெண்கள் என தொகுப்பு இருப்பதால் எல்லாருக்கும் ஏற்றவாறு பொது செபத்தை மேற்கொள்வது நல்லது. செபத்திற்கு வரும் அனைவரையும் சிறுகுழந்தைகளைக் கூடசெப உணர்வு, சூழல், மனநிலை, பாடல், வாசகம் இவைகளின் வழியாக ஆர்வமுள்ள, ஈடுபாடுமிக்க செபமாக அமைப்பது நன்று. பெரியவர்களையும் நாம் ஈடுபடுத்த முயல்வது முறையாகும். சிறுசிறு சிக்கல்கள் இருந்தாலும் இறைவனிடம் எல்லாரையும் அழைத்துச் செல்வதில் நமது கவனம் இருத்தல் முக்கியம். கடவுள் நம்மைத்தொடுவது மிகவும் வியப்புக்குரியது.

**பல்சமய செபம் :** நமது நாட்டில் பல்சமய மக்கள் இருப்பதால், அவர்களோடு சேர்ந்து பல் சமய செபங்களை மேற்கொள்ள நாம் தூண்டுதலாக முதல் முயற்சிகளை மேற்கொள்வது நன்று. பிற மறை நூல்களிலும் கடவுளின்குரல், திருவுளத் திட்டம் வெளிப்படுத்தப்படுகிறது. அவைகளையும் பயன்படுத்தி, விளக்கி அனைவர் நடுவிலும்இறைவார்த்தை ஆர்வத்தைக்கட்டி எழுப்புவோம். பெரும்பாலான இந்திய மக்கள் இத்தகைய செபமுறைகளுக்கு பிரியத்தோடு இணைவர் என்பதை மதித்து மேற்கொள்வோம்.

இறைஉணர்வு நம்மில் வளர்வதற்கு செபம் என்னும் கலையை நாம் வளர்த்தெடுப்போம், பயன்படுத்துவோம், பகிர்ந்து கொள்வோம். ஒவ்வொரு சமயமும், ஒவ்வொரு குழுவும் அன்றன்றைக்கு ஏற்ப செப அனுபவத்தை மேற்கொள் வது முறையாகும். யாருக்கோ என்றோ தயாரித்ததைப் பயன்படுத்தி அந்நேரத்திற்குரிய புதியத் தன்மையை நாம் இழந்துவிடாமல் படைப்பாற்றலோடு நன்கு தயாரித்து மேற்கொண்டால் ஆழமான அனுபவத்திற்கு கடவுளின் ஆற்றல் நம்மை ஆளாக்கும். அனுபவத்தின் வழியாக நல்ல வழிகாட்டிகள், சுயநலமின்றி முன் வந்தால் எவ்வளவோ மேலானத. அவரோடு அவரில் இருப்போம் இயங்குவோம், வளர்வோம், வாழ வைப்போம்.●

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :** சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு செபம் பதிவு செய்ய விரும்புவோர் குறைந்தது **மூன்று வாரங்களுக்கு முன்** பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

**2019-2020** சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO/DD/ CHEQUE/ வங்கி மூலம் செலுத்தலாம். **சந்தா எண்ணை** தவறாமல் குறிப்பிடவும். - ஆசிரியர்.

**வங்கி கணக்கு விவரம்**

| | | |
|---|---|---|
| BANK NAME | : | IOB-PONDICHERRY MAIN<br>JAWHARLAL NEHRU STREET, Pondy-1. |
| A/C Name | : | MISSION PRESS |
| A/C. No. | : | 007002000000123 IFSC :IOBA0000070 |
| தொடர்புக்கு | : | 0413 / 2334360 |



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



## 23-ஆம் படலம்

மேலும் ஆண்டவர் மோசேயை நோக்கி, பார்வோன் மேலும் எகிப்தின் மேலும் இன்னும் ஒரு கொள்ளை நோய் வரச் செய்வேன். அவன் உங்களை முற்றிலும் போக விடுவதோடு இங்கிருந்து உங்களைத் துரத்தி விரட்டி விடுவான் (விப.11:1).

காப்பியப் பாடல் 1223

15 **‘இசுரயேலர் வளர்த்து வந்த எந்த ஒரு விலங்கும் இறக்காது. ஒரே நாட்டில் வாழ்ந்துவரும் எகிப்தியர் மிகப் பெரும் துயரம் அடையும் போது இசுரயேல் மக்களோ இறைவனின் பாதுகாப்பால் எத்துயரும் அடையவே மாட்டார்கள். இது மாபெரும் வியப்பே’ என்றார் மோசே.**

இறைமக்கள் இசுரேலர் வளர்த்து வந்த
எந்தவொரு விலங்குந்தான் இறக்கா தென்றார்!
உறைந்திருந்து ஒருநாட்டில் வாழ்ந்து வந்த
ஓரினத்தார் மாதுயரை அடையும் போது,
சிறையிருப்பு வாழ்க்கையிலே தவித்து வந்த
சீரார்ந்த இசுரேலர் மட்டும் ஆங்கு
குறைவெதுவும் இல்லாமல் இருப்பார் என்றார்!
குவலயமே வியக்கவெலாம் நிகழும் என்றார்!

காப்பியப் பாடல் 1224

16 **இவ்வாறான வியத்தகு நிகழ்வின் மூலம், இசுரயேலர்க்கு எல்லாம் வல்ல இறைவனின் பாதுகாப்பு இருப்பதை எகிப்து மக்கள் நன்கு உணர்ந்து கொள்வர்.**

இப்படியாய் நிகழும்அந் நிகழ்வி னாலே
இருவேறு இனத்தவர்கள் அறியு மாறே,
முப்பொழுதும் படைப்பெல்லாம் அரவ ணைத்தே
முறைபிறழா தவையெல்லாம் வாழ்ந்தி ருக்க,
தப்பெதுவும் படைத்தவற்றுள் புகுந்தி டாதே
தகுமுறையில் பார்த்திறையே காப்ப தைத்தாம்,
இப்பெரிய நிகழ்ச்சியிலே எகிப்தி யர்கள்
இசுரேலர்க் கிருக்குமிறைக் காப்பு ணர்வார்!

காப்பியப் பாடல் 1225

17 **இறைவன் கூறிய அனைத்தையும் மோசே மன்னனிடம் கூறி, இறுதியாகக நாட்டில் ஆண் தலைப்பேறுகள் அனைவரும் இறக்கும் போது அஞ்சி நடுங்கும் மக்களும் பணியாளர்களும் அரசனும் இசுரயேல் மக்களோடு எகிப்தைவிட்டு வெளியேற இறைவனை வேண்டும் போது அவர் வெளியேறுவார் என்றார் மோசே.**

ஆண்டவரின்தூதுவனார் மோசே சென்று,
அவலமுறும் பார்வோனின் முன்னே நின்று,
மூண்டெழுந்த யாவேயின் சினத்தி னாலே
முடுகியவண் நிகழும்அந் நிகழ்வைக் கண்டு
வேண்டியிறை அவருடைய மக்களோடு
வெளியேற பணியாளர் தலைவ ணங்கி
தூண்டுணர்வால் மன்றாடிக் கேட்கும் போது
தூயஇறை வெளியேறிச் செல்வார் என்றார்!

காப்பியப் பாடல் 1226

18 **இறுதியாக, மோசே பார்வோனிடம் யாவே கடவுளின் பெரும் சினத்திற்கு ஆட்பட்ட அவனையும் மக்களையும் நாட்டையும் விட்டு, விண்ணிலிருந்து இசுரயேல் மக்களின் அழுகுரல் கேட்டு இறங்கி வந்த அக்கடவுள் அவருடைய மக்களை அடிமை வாழ்விலிருந்து விடுவித்து வெளியேறச் செல்லுவார் என்று கூறி ஆரோனோடு அரசனைவிட்டு அகன்றார்.**

விண்ணிருந்து இறங்கிவந்த யாவே யாக,
விஞ்சுதுயர் மூழ்கியஅப் பார்வோன் முன்னே,
கண்ணிருந்தும் காண்வொளிஇல்லாப் பொல்லாக்
காட்டாச்சி மன்னனுளம் சுடவே சொன்னார்,
நண்ணியிவண் வாழ்ந்துவந்த இசுரேல் மக்கள்
நயந்திறைவன் பின்தொடர்ந்தே எகிப்தே விட்டுப்
புண்ணியனார் காட்டுகிற வழிந டந்தே
போவார்கள் உனைவெறுத்தே, என்றார் மோசே!

**- தொடரும்..**



# உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன

- சகோ. **அ. ஆரோக்கியதாஸ்,** திண்டிவனம்.

தொடர்ச்சி...

தி.ப.1:5,8 இயேசு விண்ணுக்கு எடுத்துக்கொள்ளப்படும் முன் திருத்தூதர்களிடம் “நீங்களோ இன்னும் சில நாட்களில் தூய ஆவியரால் திருமுழுக்குப் பெறுவீர்கள். தூய ஆவியார் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையை பெறுவீர்கள். எருசலேமிலும், யூதேயா சமாரியா முழுவதிலும்,உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்” என்றார்.

எனவே, இந்த தூய ஆவியாரின் மிகப்பெரிய பணி, மனிதனாக பிறந்து, வாழ்ந்து காட்டி, சிலுவைச் சாவை ஏற்று, மனிதர்களுக்கு மீட்பு தந்த இயேசு, உயிர்த்து இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்ற உண்மையை உணர்ந்து ஏற்று அறிக்கையிடும்படி தூண்டுவதும், இறைவனின் இந்த மீட்பின் திட்டத்திற்கு சாட்சியாக இருக்கவுமேதான்.

**இறைவன் திட்டம்:** மத்.1:20,21 “கன்னி மரியா கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான். அவர் ஒரு மகனைப் பெற்றெடுப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர்தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்” என்று வானதூதர் யோசேபுக்கு கனவில் தோன்றி கூறினார்.

**இறைவன் அன்பு முறிவு:** முதல் பெற்றோர் ஆதாம், ஏவாள் கீழ்ப்படியாத பாவத்தினால் இறை உறவு துண்டிக்கப்பட்டது. மனிதன் எதற்காகப் படைக்கப்பட்டானோ அதற்கு அவன் தன்னை தகுதியாக்கிக் கொள்ளவில்லை. உருவாக்கியவர், பாதுகாத்து வந்தவர் தூயவர். அவரை அறிந்து, அன்பு செய்து, அவருக்கு கீழ்படிந்து அவர் விருப்பத்தை நிரைவேற்றி தூய்மையாக இருக்க வேண்டும். தூய்மையான உள்ளத்தோர், பேறுபெற்றோர். ஏனெனில் அவர்களைக் கடவுளைக் காண்பர். மனிதன் தான் உண்டாக்கப்பட்ட, படைக்கப்பட்ட, தூய்மை நிலையிலேயே இருந்திருந்தால், எந்த தடையுமின்றி, இறைவனோடு இந்த உலக வாழ்வின் முடிவில் பேரின்பத்தில் நிலையான பங்கு கொண்டிருப்பான்.

ஆனால் அவன் வாழ்ந்து கொண்டிருந்த இந்த உலகின் அதிபதியாகிய சாத்தானின், அலகையின் சூழ்ச்சியில் சிக்கி, இறை திட்டத்தை புறக்கணித்து இறை கட்டளையை மீறி, அலகையின் வார்த்தையில் தானும் கடவுளாகி விடலாம் என்ற பேராசையில், தான் படைக்கப்பட்டவன் என்பதை மறந்து, இறைவனுக்கு கீழ்ப்படியாததால் பாவம் செய்தான். இறைவனோடு பேரின்பத்தில் நீடித்து வாழும் உரிமையை இழந்தான். என்றாலும், இறைவன் பேரிரக்கம் கொண்டவர் என்பதால் அவன் செய்த பாவத்தால், தன்னை விட்டு பிரிந்து இருந்தாலும், அந்த இறைவனே அதற்கான பரிகாரம் செய்து, மனிதனை மீண்டும் தன் அன்பில் இணைத்துக்கொள்ள விரும்பினார். கீழ்ப்படியாமல் மனிதன்செய்த பாவத்திற்கு பரிகாரமாக, தன் ஒரே வார்த்தையான மகன் இயேசுவை தனக்கு கீழ்ப்படியசெய்து, பாவத்திற்கு பரிகாரமாக சிலுவைச் சாவை ஏற்க வைத்து, மீண்டும் மனிதனை தம்மோடு ஒப்புரவாக்கிக் கொண்டார்.

**- தொடரும்..**

**திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி:** “மறக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, மறைவாக வாழ்கின்ற பல வயதானவர்களுடன் நெருக்கமாக உள்ளேன்; உடலிலும் மனதிலும் பலவீனமாக இருப்பவர்கள் புறக்கணிக்கப்பட தேவையில்லை என, எல்லாரையும் ஒன்றிணைக்கும் சமுதாயத்தை அமைப்பதற்குத் தங்களை அர்ப்பணித்துள்ளவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.”

## திருவழிபாட்டில் பொதுநிலையினரின் பங்கேற்பு



தொடர்ச்சி.. - பேராசிரியர் அ. குழந்தைராஜ், காரைக்குடி.

பல பணிக்குழுக்களின் செயல்பாடுகள் மறை மாவட்ட மேய்ப்புபணி நிலையத்திற்குள்ளேயே துவங்கி, முடிகின்றன. எந்தப் பணிக்குழு என்ன பணிகள் செய்கிறார்கள் என்பதும், மறைமாவட்ட பல்நோக்கு சபைகளின் செயல்பாடுகள் மற்றும் சமீபத்தில் நமது திருத்தந்தை திருவழிபாட்டில் பழைய திரிதெந்தீன் லத்தீன் பாடற் பூசைக்கு இசைவு தெரிவித்திருப்பது, பராம்பரியத்தில் ஊறிப்போனவர்களுக்கு ஆறுதலாக இருக்கும். 'இஸ்பிரித்து சாந்து' என்பதில் உள்ள மகிழ்ச்சி 'தூய ஆவியன வரில்' இல்லையா?. நமது திருவழிபாட்டு முறையில் மிகச் சிறந்த முறை என்னெவெனில், காலம், இடம், சூழல், அரசியல், பின்னனி மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப வளைந்து கொடுத்து, நெகிழ்ச்சி தன்மையோடும், ஆனால் அடிப்படை விசுவாசத்தை இம்மியும் குறைத்து விடாமல், வழிபாடு நடத்துவதுதான். அனால் இந்த சலுகைகளை சிலர் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு குத்துவிளக்கிற்குள் நடைபெறும் திருமுழுக்கு, திருமணம், குருக்கள், ஆயர்கள் திருநிலைப்பாட்டு, தற்போது சில விழாக் களுக்குள் ஏதோ திருப்பலியும் நடைபெற்றது என்று சொல்வது போன்று, தன் தனித்தன்மையை இழந்து நிற்கிறது. தற்காலத்திய போதனைகள் அணுகு முறைகள் பாமரர்களுக்கு தெரிவதில்லை. படித்தவர்களும் தங்கள் என்னப்படி புரிந்துகொள்கிறார்களே தவிர ஒட்டு மொத்த சமூக சமய பொருளாதார ஆன்மீக கண்ணோட்டத் தோடு பார்ப்பதில்லை.

3. பாடற்குழுவினர் தாங்கள் இயற்றிய, ஆயரின் அனுமதி இல்லாத, கர்நாடக இசை முறை பாடலை தவிர்த்து ஆர்செஸ்ட்ரா போல இன்னிசை இசைக்காமல், நவீன கீ-போர்டுகளை சற்று குறைத்து பக்தர்களையே, ஆண்களும் பெண்களுமாகு தனியாகவோ இணைத்தோ பாடசெய்ய வைக்கலாம். இதை தமிழக ஆயர்களும் வலியுறுத்தி உள்ளனர். நம்மவர்கள் இன்னும் பாடல்களை பார்த்துதான் பாடுகிறார்களே தவிர பிரிவினை சகோத ரர்கள் அல்லது கர்நாடக இசை பாடகர்கள் போன்று, புத்தகங் களை பார்க்காமல் பாடும் பழக்கத்தை உருவாக்க வேண்டும்.

4. தற்போது பொதுநிலையினர் திருவழிபாட்டில் எத்துனை பேர் கலந்துகொள்கிறார்கள்? (1). பீடச்சிறுவர் சிறுமியர் 6 பேர். (2). காணிக்கை ஏந்தும் நபர்கள் 6. (3).மன்றாட்டு சொல் பவர்கள் 5. (4). திருப்பலி கருத்துகளை வாசிப்பவர் 1. (5). அறிக்கை திருமண ஓலை வாசிப்பவர் 1. (6). கீ-போர்டு தபேலா முதலிய வற்றில் 6. (7).மற்றவர்கள் 5. ஆக மொத்தம் 30 பேர். ஆயிரம் பேர் கூடக்கூடிய திருவழிபாட்டு சடங்கில் மீதிப்பேர் 'சுவாமி தரிசனம்' செய்கிறார்களே தவிர இவர்களுக்கு புதிய விசுவாச பிரமாணம், ஒளியின் மறையுண்மை போன்றவை தெரிவதில்லை.

பொதுநிலையினரை ஊக்கப்படுத்தினால்தான் திருச்சபை வளரும் என்பதில் நமது அமைப்புகளுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை ஏற்பட்டுள்ளதன் விளைவாகத்தான் இன்று அருங்கொடை இயக்கம், புத்துயிர் ஜெபக்குழு, அன்பியங்கள் போன்றவை உருவாக்கப்பட்டுள்ளன. ஆதிகால கிறிஸ்துவர்களை போல 'இல்லாமையை இல்லாமை' ஆக்க வேண்டும் என்ற முயற்சியில் தல ஆயர்களின் பணிகளை சிறப்பாக இருக்கின்றன. தமிழக அயர்களில் குடும்பங்களை சந்தித்த முதல் ஆயர் சேலம் ஆயர் மேதகு சிங்கராயன் ஆண்டகை அவர்கள். ஆனால் இன்னும் அடித்தட்டு மக்களை சந்தித்து அளவளாவி உரையாடி அடித்தள கிறிஸ்தவ சமூகங்களான அன்பியங்களை தினந் தோறும் சந்தித்து 'அன்பிய ஆயர்' என்று சொல்லக்கூடியவர்தான் சிவகங்கை மறைமாவட்ட ஆயர் மேதகு சூசைமாணிக்கம் ஆண்டகை இவரை போல எல்லா ஆயர்கள், குருக்கள், துறவிகள் செயல்பட்டால் இறையரசு வெகுதொலைவில் இருக்காது. பொதுநிலையினரை எப்படி திருவழிபாட்டு நிகழ்வுகளில் பங்கெடுத்து கொள்ள வைக்கிறார்கள் என்றால், சில இடங்களில் குருக்கள் அவர்களை 'எடுபிடியாக' பயன்படுத்துகிறார்கள் என்பது எதார்த்தம். திருவிழா சமயங்களில் அவர்களுக்கு பத்திரமாக 'பாட்ஜ்' அணிவித்து ஒலிபெருக்கி ஒயரை பிடிக்க சொல்லி, ஆலய வளாக துப்புறவு பீட துணி மாற்றம், பூச்செண்டுகள் தயாரித்தல், விழாக்கால இரவு கலைநிகழ்ச்சிகளில் அவர்களை லாவகமாக தள்ளிவிட்டுபொது நிலையினரை திருவழிபாட்டு நிகழ்வுகளில் முற்றிலு மாக ஓரங்கட்டிவிடுவோரும் உண்டு. இந்த பணிகளை செய்ய ஏராளமான படித்தவர்களும் சண்டை போட்டு 'பரலோகத்திற்கு டிக்கெட் வாங்கி விட்டதாக' கனவு காண்பவர்களும் உண்டு முதல் நான்கைந்து நூற்றாண்டுகளில் இல்லந்தோறும் கூடி இறைவார்த்தை கற்பித்தும், அப்பம் பிட்டும், நட்புறவிலும், செபிப்பதிலும் நிலையாய் இருந்தார்களே. அவர்களின் பக்தி விசுவாசம் தற்போதைய நிறுவனத் திருச்சபையின் வழிபாட்டு முறைகளுக்கு சற்றும் குறைந்தது அல்லவே! ●

## இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் ஒளியில் கிறிஸ்தவமல்லாச் சமயங்களோடு திருச்சபைக்குள்ள உறவு பற்றிய விதித் தொகுப்பு

Declaration on the Relationship of the Church to Non-Christian Religious

– சகோ. மரிய சலேத், சென்னை.

இன்றைய உலகு சமய சந்திப்புகள், சமய உரையாடல் கள், சமய நல்லிணக்கம், ஒருமைப்பாடு, உலக அமைதி தேவை என்பதை உணர்கின்றது. இதற்காக 2-ம் வத்திக்கான் சங்கம் புரட்சிகரமாக விடுத்த பல்சமய விழிப்புணர்வு அறிக்கையை இது, சமய உறவு அணுகுமுறை இருச்சபையின் வரலாற்றில் ஒரு திருப்புமுனை. உறவு, உரையாடலுக்கும், உரையாடல் புரிதலுக்கும், பகிர்வுக்கும் ஒரு மக்கள் இயக்கமாக செயல்பட திருச்சபை முனைகிறது. இதன்மூலம் பிற சமயங்களை அதிகம் அறிந்துகொள்ளவும், மதிக்கவும் அச்சமயங்களைப் பின்பற்றுபவர்களோடு ஒத்துழைக்க திருச்சபை கற்று கொண்டுள்ளது. சமய உரையாடலால் மூன்று முக்கிய பயன்களை காண்கிறோம்.

1. பிறசமயங்கள் மற்றும் கிறிஸ்தவர்களிடையே நல்லெண் ணமும், நல்லுறவும், இருதரப்பும் ஒருவரையொருவர் அறியவும், ஏற்றுக்கொள்ளவும் திறந்த மணப்பான்மையையும் தருகிறது.

2. நற்செய்தி அறிவுப்புப் பணிக்கும், சமய உரையாடல் பணிக்கும் உறவும், இறையியல் கண்ணோட்டத்தில் ஆழமும் கண்டுள்ளோம்.

3.பண்பாட்டு மயமாக்கலுக்கு வேகமளித்துள்ளது.

எனவே இன்று இறை நம்பிக்கை வாழ்வு என்பது ஓர் உறவு வாழ்வு இந்த பல்சமயச்சூழல் நான்கு வழிகளில் நிகழ்கின்றன. அவை அன்றாட வாழ்க்கை உரையாடல், கடவுள் அனுபவப் பகிர்வுக் கூட்டுச் செயல்பாட்டின் மூலம் நிகழ்கின்றன. கிறிஸ்தவர் சமயத்தினர் மட்டும் தனித்துப் புதிய சமூதாயம் அமைக்க இயலாது. நல்மணத்தோர் அவைரோடும் இனைந்து கூட்டு செயல்பாட்டின் மூலமாக வழி வகுக்க முடியும். சமய உரையாடலுக்கு மையமானது சமய கொள்கைகளோ கோட்பாடுகளோ அல்ல, மாறாக வாழ்வின் பொதுப் பிரச்சனைகளும் அக்கறையுமே. சமய உறவாடலின் மையநோக்கு மனித நேயமும் மானிடமேம்பாடும். மேலும் கிறிஸ்து நிகழ்வை இன்னும் ஆழமாக உய்த்துணர சமய உரையாடல் உதவுகிறது. இதன்மூலம் ஆக்க சக்தியாக இருக்க வேண்டிய சமயங்கள் அழிவுச் சக்திகளாக மாறாமல், உண்மைச் சமயத்தின் விழுமியங்களை தேர்ந்து தெளிய அழைக்கப்படுகின்றோம். இது ஒரு பலசமய கூட்டுத் திருயாத்திரை, இது ஒரு மிகச்சிறிய அறிக்கை இந்த அறிக்கை 5 எண்களை மட்டும் கொண்டுள்ளது. இவ்வறிக்கையின் மையப்பொருள்கள்:

1. மனிதர்கள் அனைவருக்கும் பிறப்பிடமும் இறுதிக்கதியும் கடவுள் ஒருவரே மனித வாழ்வின் நிகழ்ச்சிகளினல் மறைந்திருக்கும் ஓர் ஆற்றல் வாழ்வை ஆழ்ந்த சமய உணர்வில் தோய்ந்திருக்க செய்கின்றன. தவவாழ்க்கை, ஆழ்ந்த தியானம், அன்போடும், நம்பிக்கையோடும் கடவுளை நாடுதல் போன்றவழிகளில் துயரங்களிலிருந்து விடுதலை தேடுகிறான்.(எண் 2) 2. கிறிஸ்தவர்கள் நம் நம்பிக்கைக்கும், வாழ்விற்கும் சான்று பகருங்கால் கிறிஸ்துவ மல்லாச் சமயங்களைப் பின்பற்றுபவர்களோடு முன்மதியுடனும், அன்புடனும் உரையாடி அவர்களோடு ஒத்துழைத்து, அவர் களிடத்தில் காணப்படுகின்ற அருள்நெறி, மற்றும் அறநெறி சார்ந்த நலன்களையும், சமூக பண்பாட்டு விழுமியங்களையும் ஏற்று அவற்றைப் பேணி வளர்ச்சியுறச் செய்ய வேண்டும்.(எண் 2) 3. கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் ஒருவரை ஒருவர் அறிந்துகொண்டு, நேர்மையுடன் ஈடுபடவும், எல்லா மனிதருடைய நன்மைக்காகச் சமூக நீதி, ஒழுக்க நலன்கள், அமைதி, சுதந்திரம் ஆகியவற்றைப் பேணிக்காத்து மேம்படுத்துவதில் ஒத்துழைக்கவும் திருச்சங்கள் வேண்டுகோள் விடுக்கிறது.(எண் 3) 4. மனிதருடைய மாண்பையும், அதன்வழி பிறக்கின்ற உரிமைகளையும் பொறுத்தமட்டில் ஒரு மனிதரிடமிருந்து இன்னொரு மனிதரையோ, ஓர் இனத்திலிருந்து இன்னொர் இனத்தையோ அநீதியாகப் பிரித்துப் பேசும் எந்தக் கொள் கையும் செயல்முறையும் அடிப்படையற்றவை. (எண்-5). ●

132 இளம் உள்ளங்களுக்கு

## மாற்றம்



– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

**மனிதாபிமான செயல்:** மனிதாபிமானம் நிறைந்த ஒரு பெண் நாள் முழுவதும் கடினமாக உழைத்த பின்பும் வீடற்ற, தெருவோர அநாதைகளுக்கு தான் சேகரித்த உணவுகளை பரிமாற நேரம் எடுத்துக் கொண்டாள். ஒருநாள் எப்போதும் போல உணவுகளை பிறர்க்கு பகிர்ந்தளித்து கொண்டிருந்த போது ஒரு தொழிலதிபர் அதனை கவனிக்கலானார். அவர் அந்த பெண்ணை அணுகியபோது, அந்த பெண்ணும் முதல் முறையாக அவரிடம் தன் பணி அந்த ஏழைகள் மட்டில் ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்துமா என்று கேட்டார். ஆனால் அந்த பெண்ணை இடைமறித்து பேசிய அந்த தொழிலதிபர், "இந்த உலகில் வீடற்றவர்களாக இருப்பவர்கள் எவ்வளவு பேர் என்று தெரியுமா? அவர்களிடையே ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று உண்மையிலேயே நம்புகிறீர் களா?" என்று கேட்டார்.

**மாற்றம் பேசியது:** அப்போது அவர்கள் பேச்சை குறுக் கிட்ட ஒரு அநாதை வயோதிகன், அந்த பெண்ணிடம், "அம்மா! குறுக்கே பேசுவதற்கு மன்னிக்கவும். ஆனாலும் உங்களுக்கு என்னால் நன்றி சொல்லாமல் இருக்க முடியாது. நான் பசியோடு படுக்க செல்லுமுன் என் பசியாற்ற யாரை யாவது அனுப்பும் ஆண்டவரே! என்று கண்களை மூடிப் பிரார்த்தித்தேன். நான் கண்களைத் திறந்தபோது என்ன ஆச்சரியம்! உணவுடன் நீங்கள் என் முன்னே நின்றிருந்தீர்கள். கடவுள் உங்களை நிச்சயம் ஆசீர்வதிப்பார்" என்றான். அந்த பெண்ணும், "உம்மையும் கடவுள் ஆசீர்வதிப்பார்" என்று அந்த வயோதிக அநாதையிடம் கூறிவிட்டு அந்த தொழிலதிபரை பார்த்து, "இந்த ஏழைமட்டில் என் செயல் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி யுள்ளது தானே?" என்று கேட்டார். ஏழையின் முகத்தில் இறைவனை பார்த்த திருப்தி அந்த பெண்ணுக்கு. அந்த தொழிலதிபருக்கும்தான்!

**என்னால் முடியுமா:** ஒவ்வொரு நாளும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த நமக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கத்தான் செய் கிறது. இந்த நாட்டின் பிரச்சனையை நாம் தீர்க்கத் தேவை யில்லை. ஆனால் குறைந்தது ஒருவரது வாழ்விலாவது ஒரு சிறு மாற்றத்தையாவது நாம் ஏற்படுத்த முடியும். அந்த நபருக்கு அந்த உதவி உலகளவு பெரியது! ஒரு மனிதனையாவது புன்முறுவல் பூக்க வைத்தால் அல்லது சிரிக்க வைத்தால், இரக்கத்தோடும், மரியாதையுடனும் அவனை நடத்தினால், நிச்சயமாக நாமும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியவர்ளாவோம்.

**அன்னை தெரசா:** "நான் மட்டுமே இவ்வுலகை மாற்றிவிட முடியாது. ஆனால் நீர் நிலையின் நடுவே நான் விட்டெறியும் கல் மூலம் நிறைய சிற்றலைகளை ஏற்படுத்தி முடியும்? ●

## ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்

புதுவை-கடலூர் உயர் மறை மாவட்டம் பென்னாடம் பங்கில் பணிபுரியும் அருட்திரு. S.குழந்தைராஜ் அவர்களின் தாய் திருமதி. **ஜெயமேரி,** (வயது 76) அவர்கள் 21-06-2019 அன்று இறையடி சேர்ந்தார்கள். மறுநாள் 22-06-2019 அன்று 4.00 மணியளவில் மைக்கேல்புரம் அதிதூதர் மைக்கேல் ஆலயத்தில் அருட்திரு. S.குழந்தைராஜ் தலைமையேற்க, அவர்களோடு நம் மறைமாவட்ட முதன்மை குரு அருட்திரு. A. அருளானந்தம் அடிகளார் மற்றும் 15 குருக்களும் சேர்ந்து கூட்டு அடக்கத் திருப்பலி நிறைவேற்றினர். ஏராளமான கன்னியர்களும், இறைமக்களும் கலந்துகொண்டு செபித்தனர். திருப்பலிக்குப்பின் மைக்கேல்புரம் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. தாயை இழந்து துன்புறும் அருட்திரு. S.குழந்தைராஜ் மற்றும் குடும்பத்தார், உறவினர்களுக்கும் நம் செபம் கலந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இறந்த திருமதி. ஜெயமேரியின் ஆன்மாவுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும் ஆண்டவரே.** - ஆசிரியர்.

## என் பார்வை எப்படி?



– G. *போனிஃபாஸ் ஜூலியன்*, புதுவை–9.

ஏறக்குறைய முப்பத்தந்தைந்து ஆண்டுகளுக்கு முன்னாள் ஒரு நல்ல அன்பு உள்ளம் படைத்த மனிதர் வீதியில் சென்று கொண்டிருந்தார். அவர் கண்ட காட்சி அவரை சிந்திக்க வைத்தது மட்டுமல்லாமல் ஒரு பெரிய நிறுவனத்தை ஆரம்பிக்கவும் உதவி செய்தது. என்ன அந்த அவருடைய பார்வை ஒரு மனநோயாளி சாக்கடையில் உள்ள நீரை குடித்து கொண்டிருந்தான். இது அவரை திடுக்கிட செய்தது. இவ்விதமான மனநோயாளிகளுக்கு என்ன செய்யலாம் என்று திட்டம் தீட்டி புதுவை மாநிலத்தில் ஊசுட்டேரி என்ற இடத்தில் மனநோயாளிகளுக்கென்றே தனியாக ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தினார். அது இன்றும் சிறப்பாக செயல்பட்டுக்கொண்டு வருகிறது. இங்கே தங்கியிருப்பவர்கள் குடும்பத்தினராலும் சமூகத்தினராலும் ஒதுக்கப்பட்டவர்கள். இவர்களுக்கு நல்ல உறைவிடம் தந்து உணவு, உடை, கவுன்சிலிங் மற்றும் மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப் படுகிறது. சுகம் பெற்று அநேகர் தங்களுடைய இல்லத்தில் வரவேற்கபட்டார் கள். இதை ஏற்படுத்தியவர் தான் அருள்தந்தை A.S. அந்தோனி சாமி அவர்கள். இப்பணிக்கு உறுதுணையாய் இருந்தவர்கள். முன்னால் ஜிம்பர் இயக்குனர் டாக்டர் O.P. பர்காவா மேலும் நானும் இந்த இல்லத்திற்கு நல்ல உள்ளம் கொண்டவர்கள் தங்களுடைய பிறந்த தினத்திலோ, திருமண நாளன்றோ உறவினர்கள் இறந்த தினத்திலும் இந்த மனநோயாளி களுக்கு தங்களுடைய செலவில் உணவளிப்பார்கள். இது வரவேற்க தக்க ஒரு நிகழ்ச்சி, இது அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

இதை பற்றி கேள்விபட்ட ஒரு அன்பர் தன்னுடைய ஊரில் இவ்விதமான காப்பகத்தை ஏற்படுத்தினார். பல விருந்தினர்கள் இதை பார்வையிட்டார்கள். இத்தருணத்தில் ஒரு நாள் ஒரு விருந்தினர் வந்து இந்த காப்பகத்தை பார்வையிட்டார். அப்போது அந்த உரிமையாளர் அவரை அழைத்துக் கொண்டு அனைத்தை யும் விளக்கிக் கூறினார். வந்தவர் நிறைவாக காப்பக உரிமை யாளரிடம் ஓர் கேள்வி எழுப்பினார். இங்கே தங்கி இருக்கும் நோயாளிகள் எப்படி சுகமடைந்தார்கள் என்று சோதித்து அவர்களை தங்கள் தங்கள் இல்லங்களுக்கு அனுப்பி விடுவீர்கள் என்றார். காப்பகத்தின் உரிமையாளர் சொன்ன பதில் இதுதான், ஒரு தொட்டி நிறைய தண்ணீர் நிரப்புவேன் நோயாளியின் கையில் ஒரு கரண்டி, ஒரு குவளை, ஒரு வாளி கொடுத்து அந்த தொட்டி தண்ணீரை காலி செய்துவிட சொன்னேன். அப்போது விருந்தினர் சொன்னார் வாளியால் தண்ணீரை வெளியே கொட்டியவனை நீங்கள் சுகமடைந்துவிட்டாய் என்று அனுப்பி விடுவீர்களா? என்று கேட்டார். அதற்கு அந்த காப்பக உரிமையாளர் ஒரு நோயாளி கரண்டியில் தண்ணீர் எடுத்தால் அவர் இன்னும் முழுமையாக சுகம் பெறவில்லை. குவளையில் தண்ணீர் எடுத்தால் இன்னும் சிறிது காலம் தங்க வேண்டும். வாளியில் தண்ணீர் எடுத்தால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அந்த நோயாளியை வீட்டிற்கு அனுப்பி விடலாம். இப்போது இந்த உரிமையாளர் வந்த விருந்தினரிடம் நீங்கள் சிறிதது காலம் இங்கே தங்கிவிட்டு செல்வது நல்லது. உங்களுக்கு சிறந்த ஏற்பாடுகள் செய்து தருகிறேன் என்றார். வந்த விருந்தினருக்கு ஒன்றும் புரியவில்லை. காப்பக மேலாளர் கூறினார். தொட்டியினுடைய குழாயை யார் திறந்துவிட்டு தண்ணீரை வெளியேற்றுகிறார்களோ, அவர்கள் சுகம்பெற்றுவிட்டார்கள். அவர்களை உடனடியாக அவர் வீட்டிற்கு அனுப்பி விடுவேன் என்று கூறினார். இதை கேட்ட அந்த விருந்தினர் தாமும் ஒரு மனநோயாளி என்பது காப்பக உரிமையாளர் மறைமுகமாக கூறியதை எண்ணி சற்று மனநீக்கம் பெற்று அவருக்கு விடைபெற்று வீடு சென்றுவிட்டார். மனித சமுதாயத்தில் நூற்றுக்கு அதிகமாக மனநோய் இருப்பதாக மனநல மருத்துவர்கள் கூறுகிறார்கள். மனம் என்று ஒன்று இருந்தால் அதற்கு ஏற்றமும், தாக்கமும் இருக்கதான் செய்யும். நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான வகையில் இருக்கிறோம். சிலர் பேசிக்கொண்டே இருப்பார்கள். மவுனம் சாதித்தும் சண்டை போட்டுக் கொண்டும், சிரித்துக் கொண்டும் இப்படியே கூறிக் கொண்டே போகலாம். எப்படி இருந்தாலும் நம் மனதை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். இயேசு செய்த பல புதுமைகளில் மனநோயாளிகளுக்கு அருளப்பட்ட கொடைகள் பல, நல்ல உடல் நலம் பெற இறைவனை பார்த்து வேண்டுவோம். ●

# விண்ணக வாழ்வின் ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 28-11-1954



இறப்பு: 04-07-2014

## திருமதி.ஜோ.ஆல்பெர்ட்டா பிரான்சிஸ்கா பாத்திமா @ஜோ.ஆல்பெர்ட்டா ஞானதாஸ்

"அநாதி தேவனே! நீர் என் அடைக்கலம், உம்முடைய நித்திய புயமே எனக்கு ஆதாரம்" (உ.ப.33:27)

"தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர். என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார்." (சங்.18:28)

"தேவரீர் எனக்கு இரங்கி, என்னை ஆசீர்வதித்து உம்முடைய முகத்தை என்மேல் பிரகாசிக்கப் பண்ணும்." (சங்.67:1)

**திருமதி. ஜோ.ஆல்பெர்ட்டா பிரான்சிஸ்கா பாத்திமா @ ஜோ.ஆல்பெர்ட்டா ஞானதாஸ்**

அவர்களின் ஆத்துமாவிற்கு நித்திய இளைப்பாற்றியை யும், முடிவில்லா பேரொளியையும் தந்தருளுமாறு மன்றாடுகிறோம், ஆமென். –ஒரு கர்.மங்.திரி.

**பிரிவால் துயருறும்**
**கணவர்: தி.ஜோசப் ஞானதாஸ்**
**மகன்கள்: ஜோ.ஜான் ரொசாரியோ ஜெகராஜ்**
**ஜோ.ஜஸ்டின் செல்வராஜ்**
**மருமகள்கள், பேரப்பிள்ளைகள்.**

**முத்தியால்பேட்டை.**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 03–07–2019 புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவிலும், 4–7–2019 வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் முத்தியால்பேட்டை, புனித ஜெபமாலை அன்னை ஆலயத்திலும் சிறப்பு பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

---

## விண்ணக வாழ்வின் 21ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 3-8-1935



இறப்பு: 5-7-1998

### திரு. G. ஸ்டீபன் H.M.

**"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோ.11:25)**

6–7–2019 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு அரியநகர் ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்படும் பாடல் திருப்பலியில் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஜெபிக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

**பிரிவால் துயருறும்**
**மனைவி, மகன், மருமகள், மகள்கள், மருமகன்கள், பேரன்கள், பேத்திகள் கொள்ளுப்பேத்திகள்,கொள்ளுப் பேரன்கள்.**

அரியாங்குப்பம்.

---

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

**The Light Shines in the Darkness** - *(Jn.1:5)*

தோற்றம்:26-05-1951



மறைவு: 07-07-2018

### திரு.R.பன்னீர்செல்வம் Tr.

**"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" யோவான்.11:25**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 7-7-2019 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலி யில் கலந்துகொண்டு அன்னாரின் ஆன்ம சாந்திக்காக ஜெபிக்க வேண்டுகிறோம்.

**பிரிவால் துயருறும்**
***சகோதரர், மகள்கள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.***

---

## விண்ணக வாழ்வின் 30-ஆம் நாள் நினைவு அஞ்சலி

பிறப்பு: 28-7-1955



இறப்பு: 4-6-2019

### திரு. A. செல்வராஜ், வேதியர்

**"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோ.11:25)**

3–7–2019 புதன்கிழமை மதியம் 11.00 மணிக்கு அரியநகர் ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்படும் பாடல் திருப்பலியில் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஜெபிக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

**பிரிவால் துயருறும் மனைவி,**
மகன்: அருட்திரு. **S. ஜெயசீலன்**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்**

அரியாங்குப்பம்.

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி











பிறப்பு
**09-06-1955**

இறப்பு
**01-07-2019**

## திருமதி. பாத்திமா செல்வநாதன்

**"என் ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"**

**ஜெபம்**

நித்திய பிதாவே! உமது அன்பு மகளாக, எங்கள் குடும்பத்தின் சுடர் ஒளியாய் புன்னகை தவழும் முகமாக, தன் வாழ்வின் கடமைகளை மிக பொறுப்புடன் செய்து முடித்து இப்பூவுலகை விட்டு மறு உலகத்திற்கு உம்மிடம் வந்துள்ள

**திருமதி. பாத்திமா செல்வநாதன்**

அவர்களின் ஆன்மா என்றென்றும் மோட்ச பேரின்பத்தில் சகல புனிதர்களின் கூட்டத் தில் சேர்ந்து மகிழ உம்மை மன்றாடுகிறோம். ஆமென் - *கர்.மங்.திரி.*

**பிரிவால் துயருறும்**

கணவர் : **ஜோசப் செல்வநாதன்**
மகள்கள் : **சுந்தரி செல்வநாதன்**
**சில்வியா தனியேல்**
மருமகன் : **தெஸ்மோ தனியேல்**
பேரன் : **ஆந்திரேயா தனியேல், எலிசபெத் தனியேல்,**
**நித்தின் தனியேல்**

**மற்றும் உற்றார், உறவினர்கள்.**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 30–06–2019 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு புதுவை, **திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவில்** மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்

# விண்ணக வாழ்வின் 50-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி











**பிறப்பு**
**30-11-1888**

**இறப்பு**
**05-07-1969**

# ANDRE BELVIND

***உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் – யோவான் 11:25***

**ஜெபம்**

நித்திய பிதாவே! உமது அன்பு மகனாக, எங்கள் குடும்பத்தின் சுடர் ஒளியாய் புன்னகை தவழும் முகமாக, தன் வாழ்வின் கடமைகளை மிக பொறுப்புடன் செய்து முடித்து இப்பூவுலகை விட்டு மறு உலகத்திற்கு உம்மிடம் வந்துள்ள

## ஆந்திரே பெல்வன்

அவர்களின் ஆன்மா என்றென்றும் மோட்ச பேரின்பத்தில் சகல புனிதர்களின் கூட்டத்தில் சேர்ந்து மகிழ உம்மை மன்றாடுகிறோம். ஆமென்

*- கர்.மங்.திரி.*

பிரிவால் துயருறும்
**பேரப்பிள்ளைகள்,**
**கொள்ளுப்பேரப்பிள்ளைகள்**
**எள்ளுபேரப்பிள்ளைகள்**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 05–07–2019 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு வில்லியனூர், **லூர்து அன்னை திருத்தலத்திலும்** காலை 6.15 மணிக்கு புதுவை, **ஜென்ம இராக்கினி அன்னை பேராலயத்திலும்** மாலை 6.00 மணிக்கு புதுவை, **திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவிலும்** மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

**கோர்கோனா சிறை கைதிகளுக்கு திருத்தந்தையின் மடல்:** நாம் அனைவரும் தவறு செய்பவர்கள். ஆனால், கடவுள் எப்போதும் நம்மை மன்னித்து ஏற்றுக்கொள்கிறார் என்ற மையக் கருத்துடன், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இத்தாலியில் உள்ள ஒரு சிறையில் இருக்கும் கைதிகளுக்கு மடல் ஒன்றை அனுப்பியுள்ளார். இத்தாலியின் கோர்கோனா தீவு சிறையிலுள்ள கைதிகள் இணைந்து, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு எழுதியிருந்த ஒரு மடலுக்கு, திருத்தந்தை அனுப்பிய பதில் மடலில் இவ்வாறு கூறியுள்ளார். ஆல்பேனியா நாட்டில், கம்யூனிச அடக்குமுறையின் கீழ் 25 ஆண்டுகள் கடும் பணியாற்றும் தண்டனைக்கு உட்படுத்தப் பட்ட, 91 வயது நிறைந்த கர்தினால் எர்னஸ்ட் சீமோனி அவர்கள் வழியே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இம்மடலை அனுப்பினார். துன்பங்கள், மறுசீரமைப்பு, கல்வி மற்றும் மீட்பின் பலன்களைக் கண்டு வரும் சிறைக் கைதி களுடன் நெருக்கமாக இருந்து பணிபுரிய வேண்டியகடமை, திருஅவைக்கு உள்ளது என்பதை தன் மடலில் வலியுறுத்தி யுள்ள திருத்தந்தை, நாம் அனைவருமே தவறு செய்பவர்களே, ஆனால் நம் தவறுகளுக்காக மன்னிப்பை வேண்டும்போது, இறைவன் நம்மை மன்னித்து அரவணைக்கிறார் என்று கூறியுள்ளார். மாற்றத்தின் பாதையில் செல்லவிரும்பும் சிறைக்கைதிகளுக்குப் பக்கபலமாக இருக்கும் மக்களுக்கு, திருத்தந்தை இம்மடல் வழியயே தன் நன்றியை வெளியிட்டுள்ளார். - வத்.செய்தி

**கிறிஸ்தவர்கள், மற்றவர்களுக்கு ஓர் ஆசீராக முடியும்:** மிகச்சிறியவற்றைக் கொண்டு மிகப்பெரும் விடயங்களை இயேசுவின் அன்பு சாதிக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதாக திருநற்கருணை உள்ளது என உரைத்தார், திருத்தந்தை. இயேசுவின் திருஉடல் திரு இரத்தம் திருவிழாவையொட்டி உரோம் நகரின் காசல் பெர்த்தோன் பங்குத்தளத்தில் திருப்பலி நிறைவேற்றி மறையுரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எல்லையற்ற ஆற்றலைக் கொண்டுள்ள இறைவன், தன்னை ஒரு சிறு ரொட்டித் துண்டுக்குள் அடக்கி வைத்திருப்பது, அவரது அன்பின் வெளிப்பாடாக உள்ளது என்றார். பிறருக்கு உதவிச் செய்ய மறுத்து தனக்குள்ளேயே சுயநலவாதியாக வாழ்வதற்கு எதிரான மருந்தாக திருநற்கருணை உள்ளது எனவும் கூறிய திருத்தந்தை, ரொட்டியை பிட்டு பிறருடன் பகிரும் செயல், நாமும் பிறருக்கு நம்மையே வழங்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி நிற்கிறது என உரைத்தார். அன்பு, மற்றும்,அக்கறைக்காக மக்கள் பசியாய் இருத்தல், முதியோர் தனிமையில் வாழ்தல், குடும்பங்கள் சிரமங்களைச் சந்தித்தல் போன்ற சூழல்களில் இயேசு நம்மை நோக்கி, அவர்களுக்கு ஏதாவது உண்ணக் கொடுங்கள் என்று கேட்கிறார் என தன் மறையுரையில் கூறினார் திருத்தந்தை. திருப்பலியின் வழியாக ஆசீரைப் பெறும் கிறிஸ்தவர்கள், தாங்களும் மற்றவர்களுக்கு ஓர் ஆசீராக மாறமுடியும் என, தன் மறையுரையில், மேலும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். - வத்.செய்தி

**தலைமுறை தலைமுறையாகத் தொடரும் மறைப்பணி:** மனிதர்களுக்கு மீட்பளிக்க இறைவன் தன் மகனையே நமக்கு அனுப்பித்தர, மகனோ தன் பணியைத் தொடர 12 சீடர்களை அனைத்துப் பகுதிகளுக்கும் அனுப்ப, அதன்பின் ஆயர்களின் வழியாக இப்பணி தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்று கூறினார் திருத்தந்தை பிரான்ஸிஸ். சிலே நாட்டின் சந்தியாகோ தெ சிலேயின் புதிய துணை ஆயர் அல்பெர்த்தோ ரிக்கார்தோ லொரென்செல்லி ரோசி அவர் களை, ஜூன் 22, சனிக்கிழமை யன்று மாலை, வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்கா பேரோலயத்தில் ஆயராக திருநிலைப் படுத்திய திருப்பலியில் மறையுரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆயரின் பணி வழியாக மீட்பின் நற்செய்தியை பறைசாற்றுவதும், விசுவாச அடையாளங்கள் வழியாக விசுவாசிகளைப் புனிதப்படுத்துவதும், புதிய அங்கத்தினர்களைத் திருஅவைக் குள் இணைப்பதும், இவ்வுலகப் பயணத்தில் மக்களை வழிநடத்துவதும், இயேசுவே எனக் கூறினார். வாழ்வில் ஒவ்வோர் ஆயரும் தன் வேர்களை அறிந்தவராக இருக்க வேண்டும். அதே வேளை, அவர்கள் மக்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்பதால், இறைத் தொடர்புடையவற்றில் கவனம் செலுத்த வேண்டியவர்கள் எனவும், தன் மறையுரையில் குறிப்பிட்டார். ஆயர் நிலை என்பது பணியின் பெயரே அன்றி, கௌரவம் அல்ல, என்பதையும் சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஓர் ஆயரின் முதல் பணி என்பது செபம் என்பதையும் எடுத்துரைத்தார். - வத்.செய்தி.

## ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்

புதுவை-கடலூர் உயர் மறை மாவட்டம் அகரகோட்டாலம் பங்கு தந்தை அருட்திரு. S.P.ஆரோக்கியதாஸ் அவர்களின் மூத்த சகோதரர் திரு. **மரியநாதன்,** (வயது 56) அவர்கள் 23-06-2019 அன்று இரவு இறையடி சேர்ந்தார்கள். மறுநாள் 24-06-2019 அன்று மாலை 4.00 மணியளவில் மையனூர் புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் அருட்திரு. S.P.ஆரோக்கியதாஸ் தலைமையேற்க, அவர்களோடு 10 குருக்களும் சேர்ந்து கூட்டு அடக்கத் திருப்பலி நிறைவேற்றினர். ஏராளமான கன்னியர்களும், இறைமக்களும் கலந்துகொண்டு செபித்தனர். திருப்பலிக்குப்பின் மையனூர் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டார். சகோதரரை இழந்து வாடும் அருட்திரு. S.P.ஆரோக்கியதாஸ் மற்றும் குடும்பத்தார், உறவினர்களுக்கும் நம் செபம் கலந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். **இறந்த திரு. மரியநாதன் ஆன்மாவுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும் ஆண்டவரே.** - *ஆசிரியர்.*

**அமைதிக்காக விண்ணப்பிக்கும் மெக்சிகோ ஆயர்கள்:** மெக்சிகோ நாட்டில் பரவலாகக் காணப்படும் வன்முறை களுக்கு, அனைவரும் பலி ஆடுகளாக மாறிவருவதைக் காணமுடிகிறது என்று, அந்நாட்டு ஆயர் ஒருவர், கவலை வெளியிட்டுள்ளார். ஜூன் 15, கடந்த சனிக்கிழமையன்று, மெக்சிகோவின் Acacoyagua பகுதியில், கோவில் ஒன்றில், மறைக்கல்வி வகுப்புகள் முடிந்த நேரத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில், மறைக்கல்வி ஆசிரியர் ஒருவர் கொல்லப்பட்டது குறித்து தன் கவலையை தெரிவித்து, அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள Tapachula மறைமாவட்ட ஆயர் Jaime Calderon அவர்கள், கொலைகளின் எண்ணிக்கை அதிகமாவது, சமுதாய நன்னெறி மதிப்பீடுகள் குறைந்து வருவதை காண்பிக்கிறது என்று கூறியுள்ளார். மக்களுக்கு வேலை யில்லாதபோது, அநீதிகள் பெருகியிருக்கும்போது, தண்டனைகள் இல்லாததால், குற்றங்கள் பெருகும்போது, பணத்தின் மீது ஆசை வளரும்போது, மனிதரின் உயிருக்கு விலை நிர்ணயிக்கப் படும்போது, பணம் மட்டுமே அதிகாரம் செலுத்துகிறது என்று, ஆயர் அவர்கள் தன் கண்டனத்தை வெளியிட்டுள்ளார். இதற்கிடையே மெக்சிகோ ஆயர்கள், ஜூன் 17 திங்களன்று அரசுத் தலைவரைச் சந்தித்த வேளையில், நீதியும், அமைதியும், ஒருவருக்கொருவர் ஆதரவும் காட்டும் சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் வகையில் மேற்கொள்ளப் படும் உரையாடல்களில், அரசுடன் இணைந்து செயலாற்ற தலத்திருஅவை தயாராக இருப்பதாகத் தெரிவித்தனர்.

**திருத்தந்தையின் டுவிட்டர்:** "முடிவற்ற வாழ்விற்கு ஓர் இடத்தை தயாரிக்கிறது திருநற்கருணை, ஏனெனில், அதுவே வானக அப்பம்."

**Published and Printed by** Rev.Fr.C.ANTONI ROCHE **on behalf of Most Rev.** Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L., Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Rev.Fr.C.ANTONI ROCHE.
Manager : Very Rev. Msgr. A. Arulanandam.